අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. } ED/09/967/2020 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. } දිනය / திகதி / Date } 2020.04. 23

**சுற்றுநிருபம் :- 14/2020**

அனைத்து மாகாண கல்வி செயலாளர்கள்
அனைத்து மாகாண கல்வி பணிப்பாளர்கள்
அனைத்து வலய கல்வி பணிப்பாளர்கள்
அனைத்து கோட்டப் பொறுப்பு கல்வி அலுவலர்கள்
அனைத்து பிரிவெனாதிபதி தேரர்கள்
அனைத்து அதிபர்கள்
அனைத்து தனியார் பாடசாலை பிரதானிகள்,

**''நாட்டுக்கு பெறுமதியான நூலொன்று'' எழுதும் தேசிய நிகழ்ச்சித்திட்டம்**

2020 வருடத்தில் உலகெங்கும் பரவியுள்ள COVID 19 தொற்று நோய் நிலவரம் காரணமாக நம் நாட்டின் நாற்பத்து மூன்று லட்சமளவினான பாடசாலை மாணவ மாணவியர் தமது வீட்டினிலேயே காலத்தை கழிப்பதோடு அவர்களின் சிந்தனை ஆற்றல், சவாலை வெற்றி கொள்ளும் ஆற்றல் மற்றும் படைப்பாற்றல் விருத்திக்கான நோக்கில் இந்த நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. இக்காலப்பகுதியில் மணவர்களின் மனதில் உருக்கொள்ளும் ''நாட்டுக்கு பெறுமதியான கருத்துகள்'' சேர்க்கப்பட்டு நூலாக வெளியிட அவர்களுக்கு வாய்ப்பளிப்பதும் நூல்களை வாசிப்பதூடாக இக்காலத்தில் தமது அறிவு, சிறந்த மனப்பாங்கு மற்றும் திறன்களை விருத்தி செய்து அதனை படைப்பாக நாட்டுக்களிப்பதும் ஆரம்ப எழுத்தாளர்களை பாடசாலை முறைமைக்குள் உருவாக்கவதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதன் நோக்கங்களாகின்றன. இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்காக நாட்டின் அனைத்து பாடசாலைகள், பிரிவெனாக்கள், தனியார் மற்றும் சர்வதேச பாடசாலைகளில் கற்கும் தரம் ஒன்று முதல் தரம் பதின்மூன்று வரையான பிக்கு மாணவர்கள் மற்றும் மாணவ மாணவியர் தமது படைப்புகளை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில எனும் யாதேனும் மொழி மூலத்தில் முன்வைக்கமுடியும். இந்த நிகழ்ச்சித்திட்டம் பாடசாலை, வலய, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

**02. பாடசாலையின் செயற்பாடு**

பாடசாலை மதிப்பிட்டுக்குழுவை அதிபரின் தலைமையில் அமைத்துக்கொள்ள வேண்டும். அக்குழுவின் தலைவராக அதிபரோ அல்லது அவரால் நியமிக்கப்படும் பிரதி அதிபரோ இருக்க வேண்டும். அவரோடு மொழி பாடத்துக்கு பொறுப்பான நிபுணத்துவ ஆசிரியரும் பாடசாலை நூலகத்துக்கு பொறுப்பான ஆசிரியரும் விடய நிபுணத்துவ ஆசிரியர்கள் இருவருமாக மொத்தமாக 05 பேர் குழுவில் அடங்கியிருக்க வேண்டும். மாணவர்களின் படைப்புகளை மதிப்பீடு செய்வது இந்த குழுவின் செயற்பாடாகும். அதிபரால் மாணவர் படைப்பாக்கத்தில் ஈடுபடவேண்டியது குறித்து அனைத்து ஆசிரியர்களுக்கும் அறிவிக்கப்படவேண்டும். வகுப்பு மாணவர்கள் அனைவரையும் படைப்புகளை முன்வைக்க ஊக்கவிக்க வேண்டியது வகுப்பாசிரியரின் பொறுப்பாண்மையாக இருப்பதோடு மாணவர்களால் முன்வைக்கப்படும் கையெழுத்துப்பிரதிகள் வகுப்பாசிரியரால் மாணவரின் சுயவாக்கம் என உறுதிப்படுத்தப்பட்டு பாடசாலை மதிப்பீட்டுக்குழுவுக்கு முற்படுத்தப்படவேண்டும். பாடசாலை மதிப்பீட்டு குழுவினால் தெரிவு செய்யப்படும் சிறந்த படைப்புகள் கோட்டத்துக்கு பொறுப்பான அலுவலருக்கு முற்படுத்தப்படவேண்டும். இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக பாடசாலை மட்ட செயற்பாடுகளை மேற்பார்வை செய்து அங்கு ஏற்படக்கூடிய பிரச்சனைகளுக்கு முடிவெடுக்கும் தீர்மானம் கோட்ட மட்ட பொறுப்பு அலுவலர் சார்ந்ததாகும்.

கோட்டத்துக்கு பொறுப்பான அலுவலரினால் பாடசாலைகளிலிருந்து பெற்றுக்கொண்ட சிறந்த படைப்புகள் மாணவர்கள் பாடசாலைகளில் இருக்கும் தொகைக்கு ஏற்ப 200 மாணவர்களுக்கு குறைவான, 201 தொடக்கம் 500 வரையான மற்றும் 500க்கும் மேற்பட்ட என்பதாக வகுதிப்படுத்தப்படவேண்டும். இந்த வகுதிகளை மீண்டும் தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை, 06

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister } +94112784832 +94112784825 minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary } +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk

தொடக்கம் தரம் 10 வரை மற்றும் தரம் 11 தொடக்கம் 13 வரையாக பிரித்து போட்டி பிரிவுகள் 09க்கு ஏற்ப வகைப்படுத்தி வலய கல்வி பணிமனைக்கு ஒப்படைக்க வேண்டும்.

### 03. வலய கல்வி பணிமனையின் செயற்பாடு

வலயக் கல்வி பணிப்பாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர், பாடசாலை நூலக அபிவிருத்திக்கு பொறுப்பான அலுவலர் , உரிய மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) பாடத்துக்கு பொறுப்பான அலுவலர் மற்றும் நூலாசிரியர் அல்லது பொருத்தமான மொழி நிபுணர், உரிய பாடத்துக்குரிய கல்வி அலுவலர் உள்ளிட்டதாக 05 பேர் கொண்ட மதிப்பீட்டு குழுவை நியமித்துக்கொள்ள வேண்டும். கோட்ட பொறுப்பு அலுவலரால் முற்படுத்தப்படும் மாணவர் படைப்புகள் இந்த குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு உரிய தினத்துக்கு முன்னர் மதிப்பீட்டு புள்ளி அறிக்கையுடன் தெரிந்டுெத்த சிறந்த படைப்புகளை கீழுள்ள இல 06யில் காட்டப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டத்துக்கான நிபந்தனைகளுக்கமைய வலய கல்வி பணிப்பாளரினால் மாகாண கல்வி பணிப்பாளருக்கு முற்படுத்தவேண்டும்.

### 04. மாகாண கல்வி திணைக்களத்தின் செயற்பாடு

மாகாண கல்வி பணிப்பாளர் அல்லது அவரால் பெயரிடப்படும் பிரதிநிதி, மாகாண பாடசாலைகள் நூலக அபிவிருத்திக்கு பொறுப்பான அலுவலர் , உரிய மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்) பாடத்துக்கு பொறுப்பான அலுவலர் மற்றும் நூலாசிரயர் ஒருவர் அல்லது பொருத்தமான மொழி நிபுணர், உரிய பாடத்துக்குரிய கல்வி அலுவலர் உள்ளிட்டதாக 05 பேர் கொண்ட மதிப்பீட்டு குழுவை நியமித்துக்கொள்ள வேண்டும். கோட்ட பொறுப்பு அலுவலரால் முற்படுத்தப்படும் மாணவர் படைப்புகளில் இந்த குழுவினால் தெரிந்தெடுத்த சிறந்த படைப்புகள் கல்வி அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்தி பிரிவுக்கு மதிப்பீட்டு புள்ளி அறிக்கையுடனும் கையெழுத்து பிரதியுடனும் மென் மற்றும் வன் பிரதிகள் சகிதம் உரிய தினத்துக்கு முன் அனுப்பப்படவேண்டும்.

## 05.உரிய கால அட்டவணை

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் படைப்புகளை ஒப்படைக்க வேண்டிய கால அடைட்டவணையும் இறுதித் திகதிகளும்

| | | 2020 வருடத்துக்கு | 2021 வருடத்துக்கும் அதன் பின்னரும் |
|---|---|---|---|
| 01 | பாடசாலை படைப்புகள் மதிப்பீட்டை கோட்டத்துக்கு ஒப்படைக்கும் இறுதி திகதி | யூன் 30 | மே 31 |
| 02 | கோட்ட கல்வி அலுவலகத்தால் வலய கல்வி காரியாலயத்துக்கு ஒப்படைக்கும் இறுதி திகதி | யூலை 15 | யூன் 15 |
| 03 | வலய மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு மாகாண கல்வி திணைக்களத்துக்கு ஒப்படைக்க வேண்டிய இறுதி திகதி | ஆகஸ்ட்15 | யூலை 15 |
| 04 | மாகாண மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டு கல்வி அமைச்சுக்கு அனுப்பவேண்டிய இறுதி திகதி | செப்டெம்பர் 15 | ஆகஸ்ட் 15 |
| 05 | தேசிய பெறுபேறு வெளியிடப்படவேண்டிய திகதி | அக்டோபர் 15 | செப்டெம்பர் 15 |

### 06. நிகழ்ச்சித்திட்ட நிபந்தனைகள்:-

6.1 தரம் 01 தொடக்கம் தரம் 13 வரையான அனைத்து மாணவ மாணவியரும் இதற்காக படைப்புகளை முற்படுத்தலாம். தரம் 01 மற்றும் 02 மாணவர்களின் தெரிநதெடுக்கப்பட்ட படைப்புகள் உள்ளடங்கி தயாரிக்கப்பட்ட படைப்பு சஞ்சிகை (சித்திரம் /கவிதை/ சிறுவர் கதை / சித்திரகதை / கேலிச்சித்திரம் முதலிய சிறுவர் படைப்புகள் அடங்கிய) ஆக முற்படுத்தலாம்.

6.2. தரம் 03 தொடக்கம் 13 வரையான அனைத்து மாணவர்களும் கீழே காட்டப்பட்டவைகளில் ஒன்றை தெரிந்தெடுத்து படைப்பை முற்படுத்தலாம்.

**நூல் வகை**

சிறுவர் கதை
சிறுகதை
மொழிபெயர்ப்பு
புராண கதை
நாட்டார் கதை
சரிதை
அமானுஷ்ய கதை
பாடவிடயசார் நூல்
கவிதையாக்கம்
நாவல்
வரலாற்றுக்கதை
துப்பறியும் கதை
விஞ்ஞான புனைகதை
சுயசரிதை
சமய கதை
ஐதீக கதை
இளையோர்இலக்கிய படைப்பு
நாடகவாக்கம்
மாயஜாலக்கதை
உவமைக்கதை
சுற்றாடல் விவரணம்
தேவதைக் கதை
வீர தீரக்கதை
கலப்பு

6.3 ஒவ்வொரு படைப்பும் தமது கையெழுத்தில் எழுதப்பட்ட பிரதியாகவும் மற்றும் கணணி எழுத்தாக்க பிரதியாகவும் முற்படுத்தப்படவேண்டும். கணணியாக்க மென்பிரதி முற்படுத்தப்படும் போது வன் பிரதியும் முற்படுத்தப்படவேண்டும். (கணணியில் எழுதாமை நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து தவிர்க்கப்பட காரணமாக அமையாது)

6.4 சிறுகதை தொகுப்பாயின் 05க்கும் குறையாத கதைகள் கொண்டிருத்தல் வேண்டும்.

6.5 கவிதை தொகுப்பாயின் மரபு அல்லது புதுக்கவிதைகள் 20- 50க்கும் இடையில் இருக்க வேண்டும்

6.6 நாவலாயின் கணணி பதிவில் A5 தாளில் குறைந்தது 120 பக்கங்கள் வேண்டும்.

6.7. சிறுவர் கதை நூல்கள் குறைந்தது16 பக்கங்கள். ஏனையவை 49 -150க்கும் இடையான பக்கங்கள்.

6.8 சிறுவர் கதைகள் நூல்கள் முற்படுத்தும் போது வர்ண பக்கங்கள் மற்றும் சித்திரங்களோடு இருக்க வேண்டும்.

6.9 கணணி எழுத்தாயின் எழுத்து வகை iskolepotha ஆக இருக்க வேண்டும்.

6.10 சிறுவர் கதைகள் எழுத்துரு அளவில் 14 ஆக இருத்தல் வேண்டும். ஏனையவை 12 அளவில். வரிகளுக்கிடையான இடைவெளி 1.5

6.11 தலைப்புக்கும் வரிகளுக்குமான கணணி திரைக்கு அமைவாக 2 இடைவெளி இருத்தல்

6.12. எழுதும் பக்கத்தின் விளிம்புகள் பின்வருமாறு இருக்க வேண்டும். இடது பக்கம் 1.5 அங்குல இடம். எஞ்சிய மூன்று விளிம்புகளும் ஒரு அங்குலமாக இருக்க வேண்டும்.

6.13 புகைப்படங்கள் கறுப்பு வெள்ளை அல்லது 4 வர்ணங்கள் கொண்டதாக இருக்க வேண்டும். புகைப்படம் காட்டப்படும் சந்தர்ப்பத்தில் தனிநபர் அடையாளம் தெரியாதவாறான விதமான படங்கள் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

6.14. படைப்புகளில் பயன்படுத்தும் அனைத்து நபர் மற்றும் ஊர் பெயர்களும் புனைவாக இருத்தல் வேண்டும்.

6.15 வெளி அட்டை வர்ண புகைப்படம் அல்லது ஓவியத்தை கொண்டிருக்க வேண்டும்.

6.16 கவிதை நூலின் சித்திரங்களுடன் இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம் என்றாலும் clip art லிருந்து படங்கள் எடுக்க கூடாது.

6.17. கையெழுத்தில் தயாரான பிரதி முற்படுத்தும் போது நூலாக கட்டப்பட்டிருக்க வேண்டும். மாணவர்களால் தமது படைப்பு முன்வைக்கப்படும் போது மென் பிரதியாக ஆக்கிக்கொள்ள முடியாதிருந்தால் அதனை இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்க தடையாக கருதக்கூடாது.

அவ்வாறான சந்தர்ப்பத்தில் கையால் எழுதப்பட்ட பிரதிகளை பெற்று மதிப்பீடு செய்ய அதிபரும் அனைத்து அலுவலர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6.18 வலய மதிப்பீட்டு குழுவினால் தெரியப்பட்ட படைப்புகளின் மென்பிரதிகள் இறுவட்டில் (CD) முற்படுத்தப்படுவதொடு pdf வடிவத்தில் மாகாணத்துக்கு மின்னஞ்சல் செய்யப்பட வேண்டும். மாகாண மதிப்பீட்டு குழுவினால் தெரிவு செய்யப்படும் படைப்புகள் அதே வடிவத்தில் கல்வி அமைச்சுக்கு முற்படுத்தப்பட வேண்டும்.

6.19 இதற்கு முன் எச்சந்தர்ப்பத்திலும் பகிரங்கமாக வெளியிடப்பட்ட படைப்பு அல்லது ஆக்கத்தின் பகுதி சரியாக பெற்றுக்கொண்டதை சுட்டிக்காட்டாமலோ அல்லது முறைப்படி அனுமதி பெறாமலோ தமது படைப்பில் சேர்த்துக்கொள்ளக்கூடாது.

6.20 தரம் 11 தொடக்கம் 13 வரை பிரிவினர் பாட விடயங்கள் தொடர்பான நூல்களையோ செயல் திட்டங்களையோ ஆய்வுகளையோ முன்வைக்க முடியும் அதற்காக கீழ் இல 6.20, 6.1, 6.22 உள்ளவாறாக செயற்படவேண்டும்.

6.21 பாட விடயங்கள் தொடர்பான நூல்கள் தெளிவுபடுத்த வேண்டிய சந்தர்ப்பங்களில் புகைப்படங்கள் மற்றும் ஓவியங்கள் உள்ளடக்க முடியும்

6.22 பிரித்தெடுப்பு காட்டப்பட வேண்டும். அதற்கான உசாவிய நூல் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும் உசாவிய நூல்களை வெளிப்படுத்த APA முறை அல்லது Havard முறை ஆகியவற்றில் இரண்டில் ஒன்றைப் பயன்படுத்த வேண்டும்

உங்களுக்கு தேவையாயின் இந்த உதாரணம் உதவும்.

எழுத்தாளர் பெயர் - பி. தேனபது

வருடம் 1959

நூலின் பெயர் -சிங்கள படைப்பு மற்றும் இலக்கிய நயம்

வெளியீட்டாளர் -கொழும்பு அப்போதிகரிஸ் நிறுவனம்

வெளியிட்ட நகரம் - கொழும்பு

இந்த தகவல் அடிப்படையில் நூல் பட்டியல் பின்வருமாறு குறிப்பிடப்படவேண்டும்

தேனபது, பி ( 1959) சிங்களப்படைப்பு மற்றும் இலக்கிய நயம், கொழும்பு: அப்போதிகிரீஸ் எனும் விதமாக எழுதப்படவேண்டும்

6.23 வகுதியில் முன்வைக்கும் நூல்களிடையே செயற்றிட்டம் அல்லது ஆய்வு முன்வைக்கப்படுமாயின் அதற்கான அனுமதி உண்டு. அதற்கான ஒழுக்கநெறி உங்களால் பின்பற்றப்படவேண்டும்

6.24 பிறிதும் இணைப்புகள் காட்டப்படும் போது அந்த இணைப்புகளுக்கு இலக்கத்தை அதன்படி கையெழுத்து பிரதியில் இணைக்க வேண்டும்.

6.25 நூலின் தொடரொழுங்கு பின்வருமாறு பேணப்படவேண்டும்

i. முதலாம் பக்கம் - புத்தக தலைப்பு, எழுத்தாளர் பெயர் மற்றும் முதற்பக்க ஓவியம் என்பதோடு இருக்க வேண்டும்
ii. இரண்டாவது முதல் பக்கம் - முன்னட்டை பக்கத்துக்கு மேலதிகமாக அதே விதமான முதற்பக்கத்தில் தயாரிக்குக. (புத்தகப் பெயர், எழுத்தாளர் பெயர், வெளியீட்டாளர் பெயர் கொண்டதாக)
iii. சமர்ப்பணம்- உங்களுக்கு தேவையானவருக்கு சமர்ப்பிக்கலாம். எனது நூல் ..........அவர்களுக்கு அன்புடன் சமர்ப்பிக்கப்படுகிறது என்றவாறு அமைய வேண்டும்

iv. நன்றி -இந்த நூலில் வெளிவர உதவி செய்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்க பயன்படுத்துங்கள் (A4 ஒரு பக்கத்திற்கும் மேற்படக்கூடாது)

v. முன்னுரை -நூல் மற்றும் எழுத்தாளர் குறித்து எழுதப்படும் விவரங்கள் அடங்கி இருக்கவேண்டும் ( A4 பக்கங்கள் இரண்டுக்கு மேற்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்)

vi. உள்ளடக்கம் - பிரதான தலைப்பு உப தலைப்புகளுடன் பக்கங்கள் காட்டப்படவேண்டும் (சிறுவர் கதைக்கு இது தேவையில்லை.)

உள்ளடக்கம் வரையான பக்கங்கள் ரோமன் இலக்கத்தில் காட்டப்பட வேண்டும். இதற்கு அடுத்த பக்கங்களை இந்து அரேபிய இலக்கத்தில் காட்ட வேண்டும்

நூலாக்கம் தொடர்பாக மேலும் தகவலறிய http://www.natlib.lk, http://www.moe.gov.lk, எனும் இணையதளத்தை பயன்படுத்துவதோடு பிறிதும் தகவல்களுக்கு கல்வி அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்தி கிளை மற்றும் தேசிய நூலக மற்றும் ஆவண சேகைள் சபையிடம் கேட்க முடியும்.

### 07. படைப்பு மதிப்பீடு செய்யப்பட்டு விருது வழங்கப்படுவதற்கான நியதிகள்

7.1 மாகாண திணைக்கள மதிப்பீட்டின் பின் கல்வி அமைச்சுக்கு அனுப்பப்படும் சிறந்த மட்ட படைப்புகளில் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10,000 சிறந்த படைப்புகள் மின்னூல்களாக்கப்பட்டு மின் நூலகத்தில் சேர்க்கப்படும். அத்தோடு பங்குபற்றல் சான்றிதழ் வழங்கப்படும்.

7.2 இந்த 10,000 படைப்புகளில் ஒவ்வொரு வகுதிகளிலும் தெரிவு செய்யப்பட்ட 1,000 படைப்புகளுக்கு திறமை சான்றிதழ் வழங்கப்படும்

7.3 அவற்றில் அதிசிறந்த 100 படைப்புகள் தெரிவு செய்யப்பட்டு சிறப்பு விருது வழங்கப்படும். இப்படைப்புகள் கல்வி அமைச்சு மற்றும் தேசிய நூலக மற்றும் ஆவண சேவைகள் சபையினால் அச்சிட்டு வெளியிடப்படும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் வெற்றியடைய உரிய அனைத்து அலுவலர்களின் உதவி எதிர்ப்பார்க்கப்படுவதோடு இதனை தேசிய முக்கியத்துவமுடைய நடவடிக்கையாக கருத்திற் கொள்ளவும். சிங்கள, தமிழ், ஆங்கில பிரதிகளில் சொல்லப்பட்ட விடயங்கள் தொடர்பாக யாதேனும் பொருத்தப்பாடின்மை அல்லது பிரச்சனைகளிருப்பின் சிங்கள பிரதியே சரியானது எனக்கொள்ளப்படும்.

இம்முழு செயற்பாடுகளும் கல்வி அமைச்சு மற்றும் தேசிய நூலக மற்றும் ஆவண சேவைகள் சபையால் இணைப்பாக்கம் செய்யப்படும்

**ஒப்பம்: என்.எச்.எம். சித்ரானந்த**
**செயலாளர்**
**கல்வி அமைச்சு**